# ***DEPOSITION OF WITNESS***
# **IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

## **CC No.14/2025**

**PW: 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி.மீனாட்சி | Taluk | : | கும்பகோணம் |
| Husband's Name | : | திரு. சுப்பிரமணியன் | Calling | : | LW1 |
| Village | : | செட்டிமண்டபம் | Age | : | 48 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 03rd day of March 2026.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் செட்டிமண்டபத்தில் வசித்து வருகிறேன். 04.10.2024 அன்று நான் வீட்டில் இருந்தபோது எனக்கு தெரிந்த நபர் ஒருவர் வீட்டிற்கு வந்து என் கணவர் சுப்பிரமணியனுக்கு விபத்து நடந்து விட்டது என்று கூறினார். நான் சாதாரண விபத்து தான் என்று கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவர் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவரை தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். அதன்படி நாங்கள் கொண்டு சென்றபோது போகும் வழியிலேயே என் கணவர் இறந்து விட்டார். இது சம்மந்தமாக காவல் துறையினரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை. காவல் நிலையத்தில் யார் புகாரை எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. புகாருக்கான விவரம் யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் என்னிடம் தகவல் சொன்ன நபரிடம் விசாரித்து எழுதினார்கள். என்னிடம் தகவல் சொன்ன நபர் கும்பகோணம் தாலுக்கா, செட்டிமண்டபம், கரிகுளத்தை சேர்ந்த வினோத் ஆகும். போலீசார் விசாரித்தபோது என்னிடம் தகவல் சொன்ன நபர் வினோத் என்ற விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். எனக்கு இந்த விபத்து நேரடியாக தெரியாது என்றாலும் நான் விபத்தை பார்க்கவில்லை என்றாலும் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. அ.சா.ஆ.1 புகாரில் 2 வது வரியில் என்னிடம் தகவல் கொடுத்த நபரின் பெயர் தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள புகாரில் என் கணவர் சுப்பிரமணியன் மீது மோதி இறப்பை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் மற்றும் அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆகியோரை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் எனக்கு வீட்டில் வந்து விபரம் சொன்னது வினோத் என்பவர் இல்லை என்றாலும், இந்த புகாருக்கும் வினோத் என்பவர் தகவல் சொல்லவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் காவலர்களால் எழுதி பிற்பாடு என்னிடம் கையொப்பம் மட்டும் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*